TAMIL

# தரமான குடும்பத்துக்கான பகற் காப்பைத் தெரிவு செய்தல்

# குடும்பங்களுக்குத் தகவல்

National Childcare Accreditation Council Inc.

## குடும்பத்துக்கான பகற் காப்பு என்றால் என்ன?

குடும்பத்துக்கான பகற் காப்பு என்றால் சிறுவர்களைக் கவனிக்கும் ஒரு சேவை. இது பிறப்பு முதல் 12 வயது வரையுள்ள சிறு தொகுதிச் சிறுவர்களுக்கு சௌகரியமானதும், பாதுகாப்பானதுமான வீட்டுச் சூழ்நிலையில் பதிவு செய்யப்பட்ட கவனிப்பாளர்களால் சேவை வழங்கும். குடும்பத்துக்கான பகற் கவனிப்பாளர்கள், திட்ட முகாமைத்துவம், பயிற்றப்பட்ட ஒருங்கிணைப்புப் பணியாளர்கள் பிரிவு, மற்றும் குடும்பங்களுடனும் கூட்டாக வேலை செய்வார்கள். இவர்கள் சிறுவர்களுக்கு அவர்களது தனிப்பட்ட ஆற்றல்களையும், விருப்புகளையும், கவரும் வகையிலும் ஒரு தனிப்பட்ட குடும்பப் பின்னணியிலும் ஒரு அனுபவத்தை அளிப்பார்கள்.

ஒரு பகற் காப்புக் கவனிப்பாளரின் வீட்டில் சிறுவர்கள் ஒரு பரிச்சயமான கவனிப்பாளருடனும், அவர்களைவிட வயதில் கூடிய அல்லது குறைந்த வேறு சிறுவர்களுடனும் ஒரு நெருக்கமான உறவை விருத்தி செய்யும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

## நான் எப்படிக் குடும்பத்துக்கான பகற் காப்பைக் கண்டுபிடிக்க முடியும்?

குடும்பங்கள் அவர்களது உள்ளூர்த் திட்டத்தை தொலைபேசியில் அழைத்து குடும்பத்துக்கான பகற் காப்பை அணுக முடியும். ஒருங்கிணைப்புப் பிரிவு பணியாளர்கள் குடும்பத்தின் தேவைகளையும், சேர்க்கும் செயல்முறையையும், கலந்தாலோசிப்பார்கள். ஒருங்கிணைப்புப் பிரிவு ஒரு இட ஒதுக்கீட்டைக் கண்டுபிடித்து கவனிப்பாளரையும். குடும்பத்தையும் சந்திக்க ஒழுங்கு செய்து ஒரு காப்பு ஒழுங்கைக் கலந்தாலோசிக்கும்.

குடும்பங்கள் காப்பைத் தேடுவதற்கு உதவுமுகமாக தேசியச் சிறுவர் காப்பு அங்கீகரிப்புச் சபை (என் சி ஏ சி) ஒரு இலகுவாகத் தேடும் வாய்ப்பை எங்களது வலைத்தளம் (www.ncac.gov.au) மூலம் அல்லது என் சி ஏ சி யைத் 1300 136 554 இல் தொலைபேசியில் அழைப்பதின் மூலம் சிறுவர் காப்புச் சேவைகளின் பெயர்களைப் பெற வசதி செய்கிறது.

## நான் எதைத் தேட வேண்டும்?

உங்கள் சிறுவருக்கான காப்புச் சேவையின் தெரிவு பல வேறுபட்ட அம்சங்கள் சம்பந்தப்பட்டிருக்கும். அத்தோடு தங்களது பிள்ளைகளுக்கு தரமான காப்பைத் தேடும் குடும்பங்கள் தாங்கள் என்ன சிறந்த கேள்விகள் கேட்கவேண்டும் என்பதையும், எதைச் சிறுவர் காப்புச் சேவையில் தேடிப் பார்க்க வேண்டும் என்பதையும் உத்தேசிப்பதை உற்சாகப்படுத்தப்படுகிறது. அத்துடன் நீங்கள் உங்களைப் பின்வரும் கேள்விகளைக் கேட்கலாம்:

### *எல்லாச் சிறுவர்களுக்கும்*

- கவனிப்பாளர் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறாரா? அதன் *அங்கீகாரச் சான்றிதழ்* மற்றும் *தரக் குணாதிசயம்* ஆகியவற்றைக் காட்டும்படி கேளுங்கள்.
- எனது பிள்ளையின் கவனிப்பாளரைத் திட்டம் எவ்வாறு ஆதரித்தும், கண்காணித்தும் வருகிறது?
- கவனிப்பாளர்கள் பிள்ளைகளுடன் மனமுவந்தும், நட்பாகவும் கதைப்பார்களா?
- எனது குடும்பத்துக்கு என்ன தொடக்கச் செயல்முறைகள் கிடைக்கும்? எனது பிள்ளையின் முதல் நாள் அன்று என்ன நடக்கும்?
- எனது பிள்ளை எவ்வாறு கண்காணிக்கப் படுவார்? எனது பிள்ளை அவரைவிட வயது கூடிய பெரிய பிள்ளைகளுடன் விளையாடும் போது எவ்வாறு கண்காணிக்கப் படுவார்?
- எனது பிள்ளை என்ன நடவடிக்கைகளில் ஈடுபடுவார்? இந்த நடவடிக்கைகள் எவ்வாறு தீர்மானிக்கப்படப்படும்?
- எனது பிள்ளையின் நாளாந்த செயல்களைப்பற்றி எனக்கு என்ன அறிவுறுத்தல்கள் தரப்படும் அத்தோடு இது எவ்வாறு தரப்படும்?
- எழுதப்பட்ட திட்டம் ஒன்று பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறதா? எவ்வாறு நடவடிக்கைகள் திட்டமிடுவதிலும், மதிப்பீடு செய்வதிலும் எவ்வாறு எனது குடும்பம் சம்பந்தப்பட முடியும்?
- எனது பிள்ளையின் தனிப்பட்ட அல்லது மேலதிகத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கவனிப்பாளர் எவ்வாறு செயலாற்றுவார்?
- எனது பிள்ளையின் கருத்துகளும், அபிப்பிராயங்களும் எவ்வாறு செவிமடுக்கப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்?
- கிடைக்கப்பெறும் விளையாட்டுப் பொருட்கள், கருவிகள் மற்றும் நடவடிக்கைகள் எனது பிள்ளை அவன்∴அவள் இன் விருப்புகள் மற்றும் திறன்களுக்கு ஏற்றவாறு தெரிவுசெய்யவும், தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும் இருக்குமா?
- கொடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் சாதனங்கள் வயது கூடிய பிள்ளைகளுக்கு ஆர்வமூட்டுவதாகவும், சவாலளிப்பதாகவும் இருக்கிறதா?
- உண்மையான வாழ்க்கைக்குத் தேவையான காரியங்களை ஆராயும் நடவடிக்கைகளில் பங்குபற்றும் வாய்ப்புக்கள் எனது பிள்ளைக்கு இருக்கிறதா? உதாரணமாக சுயச் சுகாதாரம் மற்றும் உணவருந்தும் வேளைகள்.
- வெளியே அல்லது உள்ளே இருக்கும் சுற்றாடலும், கருவிகளும் கவர்ச்சியூட்டுவனவாக, பாதுகாப்பாக, தீங்கின்றி மற்றும் சுத்தமாக இருக்கின்றனவா?
- நடத்தை சம்பந்தமான வழிகாட்டும் கொள்கை என்ன? அத்தோடு கவனிப்பாளர்கள் பிள்ளைகள் சண்டைபிடிக்கும், அழும் மற்றும் ஒத்துழையாமல் இருக்கும் நிலைமைகளைக் எவ்வாறு கையாளுகிறார்கள்?
- எனது பிள்ளைக்கு உணவு மற்றும் பானங்கள் வழங்குவதற்கு யார் பொறுப்பாக இருக்கிறார்கள்? எனது பிள்ளையின் விசேடத் திட்ட உணவுத் தேவை எவ்வாறு பூர்த்தி செய்யப் படும்.
- குடும்பங்களுக்குரிய தகவல், கொள்கைகள், மற்றும் செயல்முறைகள் எழுத்தில் இருக்கின்றனவா? எனது குடும்பம் இந்தத் தகவல்களைப் எவ்வாறு பெற முடியும்?
- எனது பிள்ளைக்கு மருந்துகள் தேவைப்பட்டால் என்ன நடைபெறும்? எனது பிள்ளை கவனிப்பில் இருக்கும் போது சுகயீனமுற்றால் அல்லது ஒரு விபத்து ஏற்பட்டால் என்ன நடக்கும்?

### *0-5 வயதுடைய சிறுவர்கள்*

- எனது குழந்தையின் அணையாடைகள் வழங்குவதற்கு யார் பொறுப்பாயிருக்கிறார்கள்?
- எவ்வாறு எனது பிள்ளையின் மலம், சலம் கழிக்கும் பயிற்சிக்கு உதவி அளிக்கப்படுகிறது?
- எனது பிள்ளையின் தனிப்பட்ட உணவு அருந்தும் பாணியும், உறங்கும் பழக்கமும் எவ்வாறு எனக்கு அறிவிக்கப்படுகிறது?
- எனது பிள்ளைக்கு இன்னும் புட்டிப்பால் அருந்தும் பழக்கம் அல்லது தாய்ப்பால் அருந்தும் பழக்கம் இருந்தால் என்ன நடைபெறும்?
- எனது பிள்ளையின் உறங்கும் ஒழுங்கு முறைகள் என்ன? எனது பிள்ளை உறங்க விருப்பமில்லாமல் இருந்தால் என்ன நடக்கும்?

### பாடசாலைக்குச் செல்லும் வயதுடைய சிறுவர்கள்

- எனது பிள்ளை திட்டமிடுதல், தீர்மானம் எடுத்தல் மற்றும் பாடசாலை விதிகளை மீறினால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட என்ன செயல்முறைகள் இருக்கின்றன?
- எனது பிள்ளை பாடசாலைக்குச் செல்லவும், பாடசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பவும் என்ன ஒழுங்குகள் செய்யப்படடிருக்கிறது? எவ்வாறு இச் செயல்முறைகள் எனது பிள்ளைக்கு அறிவிக்கப்படும்?

© National Childcare Accreditation Council Inc - June 2005

மறு பக்கம் பார்க்கவும் ->

- எனது பிள்ளை பாடசாலைக்கு செல்ல அல்லது வீடு திரும்பும் வேளைகளிலும், மற்றும் சுற்றுலா வேளைகளிலும் அளிக்கப்படும் போக்குவரத்துச் சேவைகளுக்கு என்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் உத்தேசிக்கப் படுகிறது?

## குடும்பத்துக்கான பகற் காப்புத் தர உறுதிப்பாடு (FDCQA) என்றால் என்ன?

FDCQA அவுஸ்திரேலியா பூராவிலுமுள்ள குடும்பத்துக்கான பகற் காப்பிலிலுள்ள பிள்ளைகளுக்கு உயர் தர கவனிப்பை வழங்கி அவர்கள் கல்வி கற்பதையும், வளர்ச்சியடைவதையும் முன்னேற்றுவதைக் குறிக்கோளாய்க் கொண்டுள்ளது.

FDCQA இன் பரந்த குறிக்கோள் குடும்பத்துக்கான பகல் காப்பிலிலுள்ள பிள்ளைகள் அவர்களது வளர்ச்சிக்குரிய எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய தூண்டுதலளிக்கும், நேர்மறையான அனுபவங்கள் மற்றும் பரிமாற்றங்கள் ஆகியவற்றைப் பெறுவதை உறுதி செய்வதாகும். இது இதனைக் குடும்பத்துக்கான பகற் காப்பின் தரம் என்ன என்று விளக்கியும் இத் தரத்தை அளப்பதற்கு ஒருவழியை அளிப்பதன் மூலம் செய்கிறது. FDCQA இன் தரங்களுக்கு தகுதியடையும் திட்டங்களுக்கு NCAC அங்கீகாரம் அளித்து அங்கீகாரச் சான்றிதழ் வழங்கப்படும். இந்தச் சான்றிதழை அவர்கள் எடுப்பான வகையில் பார்வைக்கு வைக்கவேண்டும். அவர்களுக்கு ஒரு தரக் குணாதிசயச் சான்றிதழும் வழங்கப்படும், இது திட்டத்தின் ஒவ்வொரு தரப் பகுதிகளினதும் சாதனைகளைக் காட்டும். குடும்பங்கள் இந்தச் சான்றிதழைப் பார்வையிடக் கேட்கலாம்.

தரங்களின் அங்கீகாரம் காப்பின் 6 தரப் பகுதிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. இவை பிள்ளைகளுக்கு முடியுமான அளவு சிறந்த சேவைகள் வழங்குவதை உறுதி செய்யும்.

## FDCQA இன் 6 தரப் பகுதிகள்

**1. பரிமாற்றங்கள்** – பிள்ளைகள், குடும்பங்கள், கவனிப்பாளர்கள், மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவு பணியாளர்களுக்கிடையே ஏற்படும் நேர்மறையான பரிமாற்றங்கள் வெற்றிகரமான குடும்பத்துக்குரிய பகற் காப்புத் திட்டத்திற்கு மிகவும் முக்கியம்.

**2. பௌதீகச் சுற்றுச்சூழல்** – ஒரு வரவேற்கக்கூடியதும், பாதுகாப்பானதும், நல்ல வளங்களையுமுடைய சுற்றுச்சூழல் பிள்ளைகள் காப்பில் நிலை கொள்ளவும், அவர்களது தேவைக்கு ஏற்றவாறு ஆய்தறியவும், பரிசோதனை செய்யவும் அனுமதிக்கிறது.

**3. பிள்ளைகளின் அனுபவங்களும், கல்வி கற்றல் மற்றும் வளர்ச்சி** – பிள்ளைகளுக்கு தங்கள் விருப்புகளைத் தெரிவு செய்யவும், அவற்றின்படி ஒழுகவும் சந்தர்ப்பங்கள் வழங்குவது அவர்களது கல்விக்கும், வளர்ச்சிக்கும் ஆர்வமளிக்கும்.

**4. உடல் நலம், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நலமாயிருத்தல்** – ஒவ்வொரு பிள்ளையும், ஒரு சுத்தமான, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழலில் தரமான கவனிப்புப் பெறுவதற்கு உரிமை உடையவர்.

**5. கவனிப்பாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவுப் பணியாளர்கள்** – ஒருங்கிணைப்புப் பிரிவுப் பணியாளர்கள், கவனிப்பாளர்களுடனும் குடும்பங்களுடனும் சேர்ந்து வேலை செய்து திட்டத்தின் நடவடிக்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றில் திட்டத்தின் தரத்தை நிலைநாட்ட ஏதுவான செயல்முறைகள் இருக்கிறது என்பதை உறுதி செய்வார்கள்.

**6. முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்** – திட்ட முகாமைத்துவமும் ஒருங்கிணைப்புப் பிரிவுப் பணியாளர்களும் முகாமைத்துவத்தின் நன் நெறிக் கொள்கைகளையும், செயல்முறைகளையும் பயனுள்ள வகையில் நிலைநாட்டுவார்கள்.

தரப் பகுதிகள் பற்றிய மேலதிகத் தகவலுக்கு தயவு செய்து FDCQA இன் *தரச் செயற்பாட்டு வழிகாட்டி* (2004) ஐப் பார்க்கவும்.

## FDCQA ல் குடும்பங்களின் பங்கு

FDCQA ஒவ்வொரு குடும்பத்துக்குரிய பகற் காப்புத் திட்டமும் அதன் குடும்பங்களும் ஒன்று சேர்ந்து தொழிற் பட்டு அதன் தத்துவ ஞானக் கொள்கைகளையும், செயல்முறைகளையும் விருத்தி செய்வதையும், மீளாய்வு செய்வதையும் உற்சாகப் படுத்துகிறது. இவை பொருத்தமான அனுபவங்களுக்கும், பரிமாற்றத்தின் பாணிகளுக்கும், மற்றும் திட்டத்தின் எல்லா நடவடிக்கைகளுக்கும் வழிகாட்டும்.

குடும்பங்கள் கிழ்படிதல், சுகாதாரம், சுற்றுலாக்கள், நோய் தடுக்கும் மருந்தேற்றல், சூரிய ரேகைப் பாதுகாப்பு, மற்றும் பாதுகாப்புப் போன்ற விடயங்களைச் சுதந்திரமாக அவர்களது பிள்ளையின் கவனிப்பாளர்களுடன் கதைக்கக் கூடியதாய் இருப்பதும் முக்கியம்.

குடும்பத்துக்குரிய பகற் காப்புத் திட்டங்கள் அளிக்கப்படும் சிறுவர் கவனிப்புச் சுற்றாடல்கள் சிறிதாய் இருப்பதால், கையாளப்படும் வழக்கங்களும், செயல்முறைகளும் நெகிழ்ச்சியுடையதாய் இருக்கலாம். குடும்பங்கள் அவர்களது பிள்ளைகளின் தேவைகளை, அளிக்கப்படும் நாளாந்தக் கவனிப்பில் பிரதிபலிக்கக் கூடிய வகையில் கவனிப்பாளர்களுடன் கலந்தாலோசிப்பது முக்கியம்.

## தரமான சிறுவர் காப்பைப் பற்றிக் கூடுதலாய் அறிந்து கொள்வது எப்படி?

குடும்பங்கள் தரமான சிறுவர் கவனிப்பைப் பற்றிக் கூடுதலாக அறிந்து கொள்ள உதவ NCAC ஆர்வமாயுள்ளது. சிறுவர் காப்புத் தர உறுதிப்பாடு பற்றிய தகவல் NCAC இன் வலைத் தளத்தில் கிடைக்கும். சேவைகளிலும் தர உறுதிப்பாட்டுப் பிரசுரங்களின் பிரதிகள் கிடைக்கும்.

குடும்பத்துக்குரிய பகற் காப்புத் திட்டத்தினால் வழங்கப்படும் கவனிப்பின் தரத்தில் அக்கறையுள்ள குடும்பங்கள் இந்த விடயங்களைத் திட்டத்துடன் கலந்தாலோசிக்க உற்சாகப்படுத்தப் படுகிறது. தரமான திட்டங்கள் தெளிவானதும், வெளிப்படையானதுமான மனக்குறை மற்றும் முறையீடுகளைக் கையாளும் செயல்முறைகளை வைத்திருக்கும். நீங்கள் குடும்பத்துக்குரிய பகற் காப்புத் திட்டத்துடன் தரம் சம்பந்தமான விடயம் ஒன்றில் அக்கறை எழுப்பியிருந்து அது இன்னும் தீர்க்கப்படாமல் இருந்தால் NCAC இடம் ஒரு முறையீட்டைக் கையாளும் செயல் முறை ஒன்று இருக்கிறது. இதன் பிரதி ஒன்றை எங்களது வலைத் தளத்தில் அல்லது NCAC ஐ தொலை பேசியில் தொடர்பு கொண்டு பெறலாம்.

சிறுவர் காப்பு மற்றும் தரமான சேவை ஒன்றைத் தெரிவு செய்யத் தேவையான மேலதிகத் தகவல்களுக்கு NCAC ஐ **1300 136 554** இல் அழைக்கவும்.

| | |
|---|---|
| **அலுவலக நேரங்கள்:** | திங்கள் தொடக்கம் வெள்ளி வரை – காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை. நியூ சவுத் வேல்ஸ் நேரம் |
| **தபால் முகவரி:** | தட்டு 3, 418ஏ எலிசபெத் வீதி சறி ஹில்ஸ் சிட்னி நியூ சவுத் வேல்ஸ் 2010 |
| **தொலை பேசி:** | 1300 136 554 **தொலை நகல்:** (02) 8260 1901 |
| **மின்னஞ்சல்:** | qualitycare@ncac.gov.au |
| **வலைத் தளம்:** | www.ncac.gov.au |

**தொலை பேசி மொழிபெயர்ப்புச் சேவை** ஆங்கிலம் அல்லாத வேறு மொழி அழைப்புகளுக்கு –131 450

**தேசிய அஞ்சல் சேவை** செவிப் புலன் அல்லது பேச்சுப் பாதிப்படைந்தவர்களின் அழைப்புகளுக்கு – 131 677

## வேறு உபயோகமான தொடர்புகள்

**குழந்தைப் பராமரிப்பு ஊதியம்** – குடும்பங்களுக்கு உதவக் கொடுக்கப்படும் குழந்தை பராமரிப்புச் செலவுகள். குடும்ப ஆதார அலுவலகத்தை 136 150 இல் அழையுங்கள் அல்லது சென்டலிங் அல்லது மெடிக்கெயார் அலுவலகத்தை அழையுங்கள்.

**நேர்மையான வர்த்தகம் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள்** – உங்களுக்கு குழந்தை பராமரிப்பு அல்லது ஒப்பந்தங்கள் பற்றிய ஏதும் அக்கறைகள் இருந்தால் நேர்மையான வர்த்தகம் மற்றும் நுகர்வோர் விவகாரங்களுக்குப் பொறுப்பாயுள்ள உங்களது மாநில அல்லது ஆள்புல இலாகாவைத் தொடர்பு கொள்ளுங்கள்.

© National Childcare Accreditation Council Inc - June 2005